
# பாடி ஆடுவோம்

## சிறுவர் பாடல்கள்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடி ஆடுவோம்

## சிறுவர் பாடல்கள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்
பாடி ஆடுவோம்

விடயம்
சிறுவர் இலக்கியம்

ஆசிரியர்
திரு.ச. அருளானந்தம்

பதிப்புரிமை
ஆசிரியர்க்கு

ஓவியங்கள்
திரு.ச. அ. அருள்பாஸ்கரன்

முதற்பதிப்பு
27 – 04 – 1997

வெளியீடு
அருள்வெளியீடு

பதிப்பகம்
வீ.ஆர்.ஜீ.கே
(பிரசுரிப்பாளர்களும் வெளியீட்டாளர்களும்)
169, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
தொலைபேசி 347903 பெக்ஸ் 074 – 612934.

விலை – 40/-

## படையல்

வெண்மணல் கிராமத்தை வெளிக்கொணர்ந்து
காட்டிய முன்னோடி முதுபெரும் எழுத்தாளர்
அறிஞர் வ.அ. இராசரத்தினம் அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

குழந்தைகள் மலர்ந்து மணம்பரப்புவதற்கு ஆடல்கள், பாடல்கள், விளையாட்டுக்கள் பெரிதும் துணைபுரிகின்றன. மறம் என்னும் இருள் சூழ்ந்த உலகினை அன்பும், அறமும் நிறைந்த ஒளிமயமான உலகாக்கக் கூடியவர்களாக எம் சிறார்கள் வளர வேண்டும். அதற்கு அவர்களது இளமைப் பருவம் இன்பம் நிறைந்ததாக இருத்தல் வேண்டும். பாடசாலைகளே அவ்வாறான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

இளமைப்பருவத்தை இன்பம் நிறைந்ததாக ஆடல்கள், பாடல்கள், விளையாட்டுக்கள் மூலம் தாமும் மகிழ்ந்து, மற்றையோரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாக ஆக்க வகுப்பறைகள் உதவும் போது நல்லதொரு சமுதாயம் உருவாகும்.

அன்பும் பாசமும் மிக்கவர்களாக, அறிவும், ஆற்றலும் உள்ளவர்களாக, அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக அவர்களை ஆக்குவதற்கு பதினெட்டுத் தலைப்புகளில் காணப்படும் பாடல்கள் துணைநிற்கும் பண்புகளைக் கொண்டுள்ளன. சின்னஞ் சிறார்களின் உள்ளங்களில் அன்பும், அறனும், பண்பும் ஊற்றெடுத்து வளர்ந்து வாழ்க்கையை உன்னத நிலைக்கு உயர்த்தும் பாடல்களை சிறார்களுக்கு ஆக்கித்தந்த திரு. ச. அருளானந்தம் அவர்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பக்கல்விப் பாடத்திட்டத்திற்குப் பொருத்தமானதாக அமைந்த இந்நூலினை ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்புகளில் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி தி. பெரியதம்பி,**
**மாகாண கல்விப்பணிப்பாளர்.**
**மாகாண கல்வித்திணைக்களம்,**
**வடக்கு கிழக்கு மாகாணம்.**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

இன்று வெளிவரும் படைப்புக்களைப் பார்க்கும் போது அநேகமானவை வளர்ந்தோர் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் சிறுவர்க்கான படைப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இதையுணர்ந்த சிலர் சிறுவர்களுக்கான படைப்புகளை வெளிக் கொணர்கிறார்கள். அவர்களுள் ஒருவராக மிளிர்பவர் இந்த நூலின் ஆசிரியர் திரு. ச. அருளானந்தம் அவர்கள்.

**'பாடி ஆடுவோம்'** எனும் இந்நூலில் பதினெட்டுப் பாடல்கள் இருக்கின்றன. இப்பாடல்களில் அறிவுரைகள், இயற்கைக்காட்சி வருணனைகள் எனப் பல விடயங்களைச் சிறப்புடன் சொல்லியிருக்கின்றார் ஆசிரியர். அத்தோடு வெவ்வேறு மெட்டுக்களிற் பாடக்கூடியவாறு பாடல்கள் புனையப்பட்டிருப்பதும் இன்னுமொரு சிறப்பான விடயமாகும்.

மேலும், ஏனோ தானோ என்ற போக்கிற் பாடல்களைப் புனையாமல், இசையின்பத்துக் காக மட்டும் புனையாமல், அன்பு, ஒற்றுமை, அறிவின் முக்கியம், ஏற்றத்தாழ்வற்ற போக்கு, முதலியவற்றைச் சிறுவர்கள் மனத்தில் விதைக்கும் வண்ணம் பாடல்களைப் புனைந்திருக்கின்றார். ஆக மொத்தத்தில் பாராட்டுக்குரியவராகின்றார்.

ஆசிரியர்கள் நமது சின்னஞ்சிறார்களை வாசிக்கும் பழக்கத்திற்கு வழிப்படுத்த வேண்டும். வகுப்பறைகளிலும், பாடசாலைகளிலும் நூலகங்களை நிறுவி நல்ல நூல்களைச் சேர்த்து வாசிக்கத் தூண்ட வேண்டும். வாசிக்கவும், எழுதவும் ஊக்குவிக்க வேண்டும். மொழியாற்றலை விருத்திசெய்ய வேண்டும். நல்ல நல்ல நூல்களை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்து அவற்றை வாங்கிப் படிக்க அறிவுறுத்த வேண்டும்.

ஆரம்பக்கல்விப் பாடவிதானத்திற்கமைய **'பாடி ஆடுவோம்'** நூல் அமைந்திருப்பினும் எல்லோரும் படித்து இன்புறும் வகையில் பாடல்கள் இயல்பாக உள்ளன. இவ்வகை நூல்களுக்கு ஆசிரியர் உலகம் வரவேற்பளித்து ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சிறுவர்க்கான பல படைப்புக்களை திரு. ச. அருளானந்தம் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ்.எஸ். மனோகரன்,**
**மாவட்ட கல்விப்பணிப்பாளர்,**
**மாவட்டக் கல்வித்திணைக்களம்,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

புதுமை மிகு உலகம் சிறுவர் உலகம். எங்கும் எதிலும் புதுமையும், குதூகலிப்பும் நிறைந்து கும்மாளமிடும் இளஞ்சிட்டுக்கள் நம் சிறார்கள்.

அவர்களது எதிர்பார்ப்புகள், இலட்சியங்கள், கற்பனைகள் தனித்தன்மை வாய்ந்தவை. விளையாட்டில் விருப்புற்று ஆடுவதும், பாடுவதும், ஓடுவதும், வீரதீரர்களாய் கற்பனை செய்து, மகிழ்ந்து திளைப்பவர்கள். அவர்களது தனித்துவத்தைப் புரிந்து, விளையாட்டு முறைகளைப் பின்பற்றி கற்றலில் நெறிப்படுத்துவோமானால் கல்வியில் நாம் பெரிய சாதனை படைத்தவர்களாக மகிழலாம்.

பாலர் முதல் பெரியவர்களும் படித்து, இரசித்து மகிழும் வண்ணம், பாடத்திட்டத்திற்கமையப் பொருத்தமான பதினெட்டுப் பாடல்களை எழுதியுள்ளேன். பாடல்களை எளிய, கவர்ச்சியான இசைகளில், வகுப்பைக் குழுக்களாக்கி, அபிநயத்தோடு கற்றற் செயலில் மாணவர்களை ஈடுபடுத்தும்போது நோக்கம் இனிது நிறைவேறும். அத்தோடு படங்களுக்கு நிறந்தீட்டும்படி ஊக்கமூட்டுங்கள்.

ஆரம்பக்கல்வியில் மிகக் கரிசனை கொண்டு "இவ்வாறான நூல்களைத் தொடர்வரிசையாக வெளியிட வேண்டும்" என்று ஊக்குவிக்கும் வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் என்றும் நன்றிக்குரியவர். பாடல்களை மிக நுணுக்கமாகப் படித்து பாராட்டி அணிந்துரை தந்து ஊக்கமூட்டும் மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி. திலகவதி பெரியதம்பி அவர்கள் கல்வி அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டவர். பாடல்களைப் படித்து பாராட்டி, "இவ்வகை நூல்கள் நம் பாட சாலைகளின் மாணவர்கள் படித்து இன்புற வேண்டும். அதற்கு அதிபர்களும், ஆசிரியர் களும், கல்விப்பணிப்பாளர்களும் முன்வருவார்கள் எழுதுங்கள்" என்று மதிப்புரையும் தந்து உற்சாகமளிப்பவர் மட்டக்களப்பு மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ்.எஸ். மனோகரன் அவர்கள். ஓவியங்கள் யாவையும் வரைந்து நூலுருவம் பெற எல்லாவற் றையும் கவனிக்கும் எனது மகன் ச.அ. அருள்பாஸ்கரன், பாடல்களைத் தட்டச்சில் செப்பனிட்டுத் தந்துதவும் செல்வி. சித்ரா ஜெகதீசன், பாடல்களை நல்ல முறையில் கணணி மயப்படுத்தி அச்சிட்டு வழங்கிய வீ.ஆர்.ஜி.கே அச்சகத்தார் அனைவருக்கும் இதயங்கனிந்த நன்றி.

இது எனது நாலாவது சிறுவர் இலக்கிய நூலாகும். இந்நூலுக்கும் ஒத்தாசை வழங்கவிருக்கும் ஆசிரிய மாணவ உலகத்திற்கும் சிறப்பாக என் நன்றியை நவில்கின்றேன்.

**ச. அருளானந்தம்.**
**ஆலங்கேணி**
**கிண்ணியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதவுகள்

01. பாடி ஆடுவோம்
02. சுழன்று ஆடுங்கள்
03. பாடல் கேளுங்கள்
04. பாடு தம்பி
05. பால் நிலாவைப்பார்
06. ஊஞ்சல் ஆடுவோம்
07. அப்பாவும் தம்பியும்
08. அப்பாவும் நானும்
09. பாலைப்பருக வேண்டும்
10. அக்கா பள்ளி போகிறாள்
11. ஆடுது மயில்
12. மணம் துள்ளுது
13. பூக்கள்
14. எங்கள் வீடு
15. கோச்சி வருது
16. சேவலும் காவலும்
17. தம்பியும் சைக்கிளும்
18. சைக்கிள் ஓடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடி ஆடுவோம்

பாலர் நாங்கள் கூடுவோம்
பாட்டுப் பாடி ஆடுவோம்
தோழர் கூடி ஓடுவோம்
சேர்ந்து ஆடிப் பாடுவோம்.

சின்னச் சின்ன கைகளை
சேர்த்து ஒன்றாய் பிடித்துமே
பின்னிக் கொண்டு பூக்களாய்
பாட்டுப் பாடி ஆடுவோம்.

அன்பு கொண்டு வாழுவோம்
அறிவைத் தேடிக் கொள்ளுவோம்
இன்பம் ஒன்றாய் வாழ்ந்திடில்
இந்த உலகம் சொர்க்கமே.

கடவுள் தந்த தோட்டத்தில்
கன்னிப் பூக்கள் நாங்களே
மடமை நீக்கி வாழுவோம்
மனதால் உயர்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழன்று ஆடுங்கள்

தம்பி தங்கை வாருங்கள்
தாளம் தட்டி ஆடுங்கள்
தும்பி போன்று வட்டமாய்
சுற்றி வந்து பாடுங்கள்

இடுப்பில் கையைச் சேருங்கள்
இணைந்து நெருங்கிக் கூடுங்கள்
பிடித்த கையைக் கோருங்கள்
பாசம் கொண்டு பாருங்கள்

முகத்தில் மகிழ்ச்சி காட்டுங்கள்
முகம் மலர்ந்து பாடுங்கள்
சுகம் உடலில் சேர்ந்திடும்
சுழன்று சுழன்று ஆடுங்கள்

அன்பை மனதில் ஏற்றுங்கள்
அறிவை உள்ளத்தில் தேக்குங்கள்
இன்பம் இன்பம் பாடுங்கள்
இனிமை கூடும் ஆடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல் கேளுங்கள்

பள்ளி செல்லும் பாலர்களே
பாரதி பாடலைக் கேளுங்கள்
வெள்ளை றோஜாச் செல்வங்களே
வள்ளுவன் குறளைப் பாடுங்கள்

காலையில் கல்வி கல்லுங்கள்
கல்மேல் எழுத்தாய் ஆகிவிடும்
மாலையில் ஆடி மகிழுங்கள்
மனதும் உடலும் வலிமையுறும்

கற்பதை மனதில் கொள்ளுங்கள்
களவு பொய்யைத் தள்ளுங்கள்
சொற்படி நடந்து காட்டுங்கள்
சொர்க்கம் உண்டு ஆடுங்கள்

அறிவால் உயர்ந்து நில்லுங்கள்
அன்பால் இணைந்து வெல்லுங்கள்
உறவு உயிர்மேல் வையுங்கள்
உலகம் மகிழும் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடு தம்பி

பாட்டுப் பாடு தம்பி
பார் புகழப் பாடு
கேட்டு உன்னை உலகம்
தூக்கிக் கொண்டு ஆடும்

நல்லோர் சொல்லே மந்திரம்
நலமே என்றும் தந்திடும்
சொல்லில் இன்பம் சேருங்கள்
சொர்க்கம் கூடும் பாடுங்கள்

அஞ்சா நெஞ்சம் வேண்டும்
அறிவால் உயர்தல் வேண்டும்
கெஞ்சி வாழ்தல் வேண்டாம்
கெடுதி செய்தல் வேண்டாம்

அன்பே உலகில் தெய்வம்
அனைத்து உயிரும் தெய்வம்
உன்னை உணர்ந்து கொள்ளு
உலகே சொந்தம் பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பால் நிலாவைப் பார்

பால் நிலாவைப் பாரடா
பந்து போன்று வானத்தில்
சூழ்ந்து வெள்ளிக் கூட்டங்கள்
சுடர் பரப்பி மின்னுது

வட்ட நிலா வந்துமே
வான் முகட்டில் நிற்குது
தொட்டுக் கையால் பார்க்கவே
துள்ளி மனதும் துடிக்குது

வீட்டு முற்றப் பாயதில்
வைத்து அம்மா உணவையும்
ஊட்டிக் கதைகள் சொல்லுவார்
உணர்வை ஊட்டிச் செல்லுவார்

குளிர்ந்த ஒளியில் மரஞ்செடி
குளித்து மயங்கி ஆடுது
பளிங்குச் சிலைகள் போலவே
பலதும் அழகு சூடுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் ஆடுவோம்

உயர்ந்த மரத்துக் கிளையிலே
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
நயம் நிறைந்த பாடலை
நாளும் போற்றிப் பாடுவோம்

அண்ணன் ஊஞ்சல் பலகையில்
ஆட நுனியில் நிற்கிறான்
கண்ணன் பலகை நுனியிலே
கயிற்றைப் பிடித்து நிற்கிறான்

தம்பி தங்கை ஊஞ்சலில்
தாளம் போட்டுப் பாடுறார்
உந்தி உந்தி அண்ணன்மார்
ஊஞ்சல் ஆட வைக்கிறார்

சிறுவர் நாங்கள் செய்வதை
சுற்றம் சூழ்ந்து பார்க்கிறார்
பெருமை கொண்டு பெரியவர்
பார்த்துக் களித்து நிற்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவும் தம்பியும்

மண் வெட்டியை எடுத்தனர்
வட்டப் பாத்தி வெட்டினர்
கொண்டு வந்த செடிகளை
குழியில் அப்பா வைத்தனர்

வட்ட வட்டப் பாத்தியில்
வளரும் மரஞ் செடிகளை
தொட்டுத் தொட்டுப் பார்த்துமே
தண்ணீர் தம்பி ஊற்றினன்

பச்சை இலைச் செடிகளில்
பல நிறத்தில் பூக்களும்
உச்சிக் கிளையில் காய்களும்
உருண்டு திரண்டு தொங்கின.

பச்சைக் காய்கள் மஞ்சளாய்
பழுத்துத் தொங்கிக் குலுங்கின
"அச்சா" பழங்கள் சாப்பிட
ஆய்ந்து அப்பா தந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவும் நானும்

குருவி பாடத் தொடங்குது
கோழி கூடக் கூவுது
இருளும் மெல்ல விலகுது
என்னை அம்மா பார்க்கிறார்

அப்பா குளித்து வருகிறார்
ஆய்ந்து பூக்கள் எடுக்கிறார்
எப்ப வந்து எழுப்புவார்
என்று மூடிப் படுக்கிறேன்

வந்து பக்கம் இருக்கிறார்
வருடி அன்பாய் தொடுகிறார்
தந்தை பாசப் பிணைப்பினால்
தருணம் பார்த்து எழுகிறேன்

துலக்கிப் பல்லைக் குளித்துமே
தந்தை பக்கம் வந்துமே
வழக்கம் போல இறைவனை
பாடித் தொழுது காட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாலைப் பருக வேண்டும்

அம்மா எழுந்து வந்தனள்
அடுப்பை ஏற்றி வைத்தனள்
செம்பைக் கையில் எடுத்தனள்
சென்று பாலைக் கறந்தனள்

பாலைக் காய்ச்சித் தந்தனள்
பருகச் சொல்லி இருந்தனள்
வாலைக் கிளப்பிக் கன்றுமே
வந்து துள்ளிப் பாய்ந்தது

அன்பாய் தாயும் அழைத்தது
அமுதப் பாலைக் கொடுத்தது
கன்று குடிக்கும் போதிலே
கனிந்து அணைத்துக் கொண்டது

பாலைப் பருக வேண்டுமாம்
பலனும் வந்து சேருமாம்
காலை மாலை இருமுறை
கன்னல் பாலைப் பருகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா பள்ளி போகிறாள்

அக்கா குளித்து வருகிறாள்
அழகாய் சட்டை அணிகிறாள்
சிக்கைச் சீப்பால் நீக்கிறாள்
சீவிச் சடையைப் பின்னுறாள்

பேனா பென்சில் எடுக்கிறாள்
பையில் போட்டு அடைகிறாள்
தானாய் பொட்டு வைக்கிறாள்
தலையை அசைத்துக் கொள்கிறாள்

உணவுத் தட்டை எடுக்கிறாள்
உண்டு நீரைக் குடிக்கிறாள்
சுணங்கிப் போச்சு என்கிறாள்
சொல்லிக் கொண்டு நடக்கிறாள்

புத்தகப் பை முதுகிலே
புதிய உலகம் கண்ணிலே
புத்தம் புது பாவைபோல்
பள்ளிக் கூடம் போகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுது மயில்

வண்ணப் பூக்கள் முற்றத்திலே
பூத்துக் குலுங்குது
வண்டு வந்து சுற்றியதை
வட்டம் அடிக்குது

சல சலத்து ஓடையிலே
தண்ணீர் ஓடுது
கல கலத்து காற்றசைந்து
குளிர்மை தேடுது

வீசும் காற்றின் பூஞ்செடிகள்
மிதந்து ஆடுது
மூசும் வண்டு ஊதியிசை
வீணை மீட்குது

பறவை இனம் பறந்து பாடி
பாடல் இசைக்குது
குரல் குயிலின் இனிமையிலே
மயிலும் ஆடுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் துள்ளுது

கன்று துள்ளி ஓடுது
காற்றில் மரமும் அசையுது
நின்று மயிலும் ஆடுது
நீலக் குயிலும் பாடுது

வண்டு பறந்து திரியுது
வண்ணப் பூக்கள் விரியுது
கண்டு தும்பி ஊதுது
காதில் பாய்ந்து இனிக்குது

பறவை பாடிப் பார்க்குது
பறந்து குஞ்சைத் தேடுது
சிறகை விரித்துக் காட்டுது
சின்னக் குஞ்சும் சிலிர்க்குது

வானில் வில்லும் தெரியுது
வண்ண நிறங்கள் நெளியுது
காணும் மனதும் துள்ளுது
கடவுள் செயலை உள்ளுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பூக்கள்

தாமரை குளத்தில் தலையவிழும்
தாழம் பூவோ மணம் கமழும்
சாமரை வீசும் மயிற் கொன்றை
சண்பகம் முல்லை முகம் பார்க்கும்

சூரிய காந்தி கண் விழிக்கும்
சூடி இதழ்கள் கண் பறிக்கும்
நேரிய மல்லிகை மலர்ந்தாடும்
நீரில் பூக்கள் அசைந்தாடும்

வண்ணம் சூடும் ரோஜாப்பூ
வடிவாய் மலரும் அல்லிப்பூ
தன்மை சேர்க்கும் காடெல்லாம்
தள்ளும் பூக்கள் தேன்சொரியும்

அத்திப் பூவோ மருந்தாகும்
அகத்திப் பூவோ குழம்பாகும்
நித்திய மருந்தாம் வேப்பம்பூ
நிமிர்ந்து ஆடும் அலரிப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வீடு

கம்பு தடி கிடுகு மட்டை
கொண்டு வந்தான் அண்ணா
தும்பு சணல் கயிறு வகை
தம்பி எடுத்து வந்தான்

கொப்பு வெட்டி கொடியும் கட்டி
குடி மனையும் செய்து
கப்பு நட்டுக் கூரை யிட்டு
கிடுகு கொண்டு வேய்ந்தோம்

படுக்கை அறை மண்டபமும்
பெரிய சமையல் கட்டும்
எடுப்பான கதவு யன்னல்
எங்கள் வீட்டில் வைத்தோம்

களி மண்ணால் சுவர் வைத்து
சாணம் கொண்டு மெழுகி
அழகான வீடு ஒன்றை
இனிது கட்டி முடித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோச்சி வருது

கோச்சி வருது கோச்சி வருது
கொஞ்சம் விலகி நில்லுங்கள்
ஆச்சி போகும் கோச்சி வருது
ஐயா விலகிக் கொள்ளுங்கள்

தண்ட வாளக் கோட்டின் மேலே
சட சடத்து வருகுது
கண்ட மனம் துள்ளியாட
காற்றாய் கோச்சி வருகுது

சக்குப் புக்கு சக்குப் புக்கு
சத்தம் போட்டு வருகுது
அக்கா அண்ணா பாட்டன் பாட்டி
ஆடிப் பாட வருகுது

சிவப்பு வெளிச்சம் கண்ட போது
சீறிக் கொண்டு நிற்குது
கவரும் பச்சை வெளிச்சம் கண்டு
வீசில் அடித்துப் போகுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சேவலும் காவலும்

காவல் தலைவன் போலவே
கழுத்தை பக்கம் அசைத்துமே
சேவல் வந்து கூவுது
தேடிக் கோழி போகுது

மண்ணைக் காலால் கிளறுது
மண்ணும் கிளர்ந்து சிதறுது
உண்ணும் பொருளைத் தேடுது
ஊரும் புழுவைக் காணுது

கொத்திக் கொத்திக் கொடுக்குது
கோழி அதனை உண்ணுது
தத்தி வந்த காகமும்
தூர நின்று பார்க்குது

பக்கம் நாயும் வந்தது
பதுங்கிப் பூனை சென்றது
கொக்கொக் என்று சேவலும்
காவல் செய்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பியும் சைக்கிளும்

மெல்லக் கண்ணை விழிக்கிறான்
விடிந்த பின்னும் படுக்கிறான்
பள்ளி இன்று இல்லையாம்
படுத்துக் கிடக்க நினைக்கிறான்

அப்பா எழுந்து வருகிறார்
அடித்து மணியை ஒலிக்கிறார்
இப்போ வந்தால் பழகலாம்
இந்தா சைக்கிள் என்றனர்

துள்ளித் தம்பி எழுகிறான்
சுருட்டிப் பாயை வைக்கிறான்
தள்ளிச் சைக்கிள் உருட்டுறான்
தத்தித் தாவிப் பாய்கிறான்

முன்னால் தம்பி பார்ப்பதும்
மூசிப் "பெடலை" மிதிப்பதும்
பின்னால் அப்பா பிடிப்பதும்
பார்க்க இன்ப வேடிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் ஓடுவான்

சைக்கிள் ஓடுவான் - தம்பி
சைக்கிள் ஓடுவான்
தைக்கும் வெயிலிலும் - அவன்
சைக்கிள் ஓடுவான்

சின்னக் கைகளால் - சைக்கிள்
"காண்டில்" பிடிப்பான்
உன்னிக் கால்களால் - அதன்
"பெடலை" மிதிப்பான்

தாவி ஏறுவான் - தம்பி
சறுக்கி விழுவான்
கூவி அப்பாவை - துணை
கூட்டி ஓடுவான்

மணியை அடிப்பான் - அழுத்தி
"பிறேக்கை" பிடிப்பான்
தனியாய் வீதியில் - இப்போ
தானாய் ஓடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் இலக்கியத்தில் ஆர்வங் கொண்ட திரு. ச. அருளானந்தம் அவர்கள், ஆரம்பக் கல்வியில் அனுபவமுடையவர். சிறுவர்களது வயது, முதிர்வு, அனுபவம், ஆர்வம், விருப்பு ஆகியவற்றை உணர்ந்து பாடல்களை எழுதிவருபவர். **இன்பக் கனிகள், பாட்டுப் பாடுவோம், காகமும் தம்பியும்,** வரிசையில் **பாடி ஆடுவோம்** எனும் சிறுவர் பாடல் தொகுப்பு வெளிவருகின்றது.

இவர் சிறந்த கவிஞர். சிறுகதை எழுத்தாளர், நாடக ஆசிரியர். உள்ளக் கமலம், கவைத்தேன், பார்த்தேன், மலைத்தேன், போன்ற சிறப்பு மலர்களின் இதழாசிரியர். கேணிப்பித்தன், ஆலன், ஆகிய புனைபெயர்களில் பத்திரிகைகளுக்கு எழுதுபவர்.

இவரது சிறுவர் பாடல்கள் விரும்பிய மெட்டுக்களில் பாடுவதற்கு ஏற்றதாக அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். ஆரம்பக் கல்விப் பாடத்திட்டத்திற்குப் பொருத்தமான சிறந்த துணை நூலாகும்.

**க.தங்கராசா**
பிரதேச கல்விப்பணிப்பாளர்
பிரதேசக் கல்வித்திணைக்களம்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org